மக்கள் வாழ்வார்கள், ஆகவே இந்த நிதியாண்டிலேயே மேம்பாலம் அமைக்க ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே இந்த அரசு நெடுஞ்சாலைத் துறைக்கும் சரி, கிராமச்சாலைகள் துறைக்கும் சரி, மற்ற பல்வேறு துறைகளுக்கும் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்து படிப்படியாக காரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கிறோம் என்பதைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய தொகுதிக்கு பாலம் வேண்டும் என்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறார். அதிலே இந்த அரசுக்கு மிகவும் சந்தோஷம். இருந்தாலும் இந்தச் சாலை ஊராட்சி ஒன்றியச் சாலை. இது கிராமச் சாலையாகத்தான் இருக்கிறது. அந்தப் பகுதியினுடைய தேவையைக் கருதி நான் ஏற்கெனவே சொன்னதைப்போல உரிய அதிகாரிகளை அனுப்பி அப்படி ஒரு பிரச்சினை இருக்குமானால் கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழே அதை எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 73, திரு. ஆ. செல்லத்துரை, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

73—

தாமிரபரணி ஆற்றுக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*10167—திரு. ஆ. செல்லத்துரை :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சாத்தான்குளம், உடன்குடி, தாமிரபரணி ஆற்றுக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

(ஆ) ஆய்வுப் பணிகள் நிறைவுற்று, திட்ட மதிப்பீடு இறுதியாக்கப்பட்டு, தொழில்நுட்பக் குழுவின் ஒப்புதலுடன் அரசின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் திட்டப் பணிகள் செயலாக்கத்திற்காக எடுத்துக்கொள்ளப்படும்.

1992 செப்டம்பர் 24]

திரு. ஆ. செல்லத்துரை : வணக்கத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, 6 கோடி தமிழ் மக்களின் காவல் தெய்வமாகவும் தாயாகவும் விளங்குகின்ற எங்கள் அகிலம் காக்கும் வழியிலே நின்று தர்மத்தின் அருளாட்சி நடத்தும் எனது காவல் தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் கிராமப் புறத்தில் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் சாத்தான் குளம், உடன்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மிகவும் விரைவிலே நிறைவுபடுத்தித் தரவேண்டும். எங்கள் பகுதியைப் பொறுத்தமட்டில் மழை பெய்யாத காரணத்தினால் நிலத்தடி நீர் எல்லாம் வறண்டு, வற்றி நாங்கள் இப்போது குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். எங்களுடைய கிணறுகளில் எல்லாம் கடல் நீர்புகுந்து உப்பாக இருக்கிறது. எங்கள் பகுதியிலே இருக்கின்ற மக்கள் குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். நாங்கள் இன்றைக்கு குடிப்பதற்கு தண்ணீர் கூட வெளிப் பகுதியிலிருந்து கிரயம் கொடுத்து வாங்கக்கூடிய நிலையில் தான் இருக்கிறோம். ஆகவே அமைச்சர் அருள் கூர்ந்து இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவு செய்து எங்களுடைய பகுதி மக்களுடைய குறையை நீக்கித் தருவார்களா என்று கேட்டுக்கொள்வதோடு இந்தத் திட்டம் முழுமையாக நிறைவு பெருமானால் கிட்டத்தட்ட சாத்தான்குளம், உடன்குடி பகுதியில் கிட்டத்தட்ட 308 கிராமப் பகுதி மக்கள் குடிநீர் பிரச்சினை இல்லாமல் முழுமை பெறுவார்கள் என்பதையும் தெரிவித்து இதை உடனடியாக நீங்கள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி. என்ன கேள்வி கேட்க விரும்புகிறீர்கள் ?

திரு. ஆ. செல்லத்துரை : இதனை உடனடியாக அமைச்சர் அவர்கள் செய்து தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் பேரூராட்சி, உடன்குடி பேரூராட்சி மற்றும் 308 ஊரகக் குடியிருப்புகளுக்காக கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைப்பதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது. இத்திட்டத்தின் நீர் ஆதாரம் பொன்னங்குறிச்சி அருகே தாமிரபரணி ஆற்றில் அமைக்கப்பட்டு உள்ளது. சாத்தான்குளம் மற்றும் உடன்குடி நகரப் பேரூராட்சிகள் மட்டும் அல்லாது சாத்தான்குளம், உடன்குடி, ஆழ்வார் திருநகரி, கருங்குளம் மற்றும் திருவைகுண்டம் ஒன்றியங்களில் உள்ள 308 ஊரகக் குடியிருப்புகள் இத்திட்டத்தினால் பயன் பெறும். இத்திட்டத்திற்கு 17 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொழில்நுட்பக் குழுமம் ஒப்புதல் அளித்

திருக்கிறது. உள்ளாட்சி அமைப்புக்களின் தீர்மானங்கள் இயற்றப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு இம்மாத இறுதிக்குள் அனுப்பி வைக்கப்படும். அரசின் ஒப்புதலுடன் திட்டப் பணிகள் மிக விரைவில் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சாத்தான்குளம், உடன்குடியோடு நிற்கவேண்டும். அங்கிருந்து ராதாபுரம் போகக்கூடாது. (சிரிப்பு).

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம், நாங்குநேரி, ராதாபுரம் போன்ற பகுதிகளில் எல்லாம் குடிநீர் விலைக்கு வாங்குகின்ற சூழ்நிலை இருப்பதால் இன்றைக்கு கொடிய குடிநீர் பஞ்சம் அங்கே நிலவுகின்ற காரணத்தால் உலக வங்கி கடன் நிதியிலிருந்து இதற்கு முன்னுரிமைக் கொடுத்து உடனடியாக செயற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆலோசனையின்படியும், ஆணையின்படியும் மிக விரைவில் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சூ. சே. இராஜமன்னார். நீங்களும் உங்களுடைய ஓட்டப்பிடாரத்திற்குப் போகக்கூடாது. இதுபற்றிய கேள்வியாக இருக்கவேண்டும்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் தான் அதுவும் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை; இல்லை; அது தாமிரபரணிக்கு தெற்கே இருக்கிறது. நீங்கள் வடக்கே இருக்கிறீர்கள்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில்தான் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கெல்லாம் பதில் வராது.

1992 செப்டம்பர் 24]

திரு. சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தாழ்மையான வேண்டுகோள். இன்று நெல் அரவை மில் வைத்து இருக்கிற ஆதிதிராவிட தொழில் அதிபர்களுக்கு 'ஹல்லிங் ஏஜென்சி' கொடுப்பதில் செக்யூரிட்டி டெப்பாசிட்டாக 50 சதவீதம் பணம் கட்டினால் போதும் என்று உத்தரவு பிறப்பித்து இருக்கும், ஆதிதிராவிட மக்களின் இரட்சகராக பெயர் பெற்று இருக்கும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு வாருங்கள்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : தலைவர் அவர்களே, சீவலப்பேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று வரும் அந்தத் திட்டத்தை தூத்துக்குடி விமான நிலையம் ஆரம்பிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வியாகப் போடவும். (குறுக்கீடு) சீவலப்பேரிக்கு இதில் எப்படி பதில் வரும்? உட்காருங்கள். தனிக் கேள்வியாகப் போடவும்.

வினா எண் 74, திரு. ம. சின்னசாமி மற்றும் திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

74—

நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் இன்றியமையாமையை மக்களுக்கு உணர்த்துதல்

*9719—திரு. ம. சின்னசாமி:

திரு. என். ஆர். சிவபதி:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் இன்றியமையாமையை மக்கள் இன்னும் முழுமையாக உணரவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதன் இன்றியமையாமையை குறித்து மக்கள் அறிந்துகொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS